Registered at the G. P. O. as a Newspaper

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

போன்: 369 National TAMIL DAILY தேசிய தினசரி தபாற் பெட்டி எண்: 49

மலர் 3 யாழ்ப்பாணம். பிலவ சித்திரை 10 ஆம் நாள் துல்கஃதா 6 (22-4-61) சனிக்கிழமை இதழ் 59

வாசனை உலகில் ஓர் பரபரப்பு!

இன்பம் தரும் 33 303 3003 பத்திகளை

உபயோகியுங்கள்.

தயாரிப்பாளர்கள்:

S. V. முருகேசன் அன் சன்ஸ்

பெங்களூர்–2.

Advt. 83

# உடுப்பிட்டி சிவசிதம்பரம் சிறைபட்டாரா? இல்லையா?

கொழும்பு, வெள்ளி

உடுப்பிட்டிமெம்பர் திரு. எம். சிவசிதம்பரமும் காவலில் வைக்கப்பட்டிருப்பதாக பார்லிமெண்டில் சபாநாயகர் அறிவித்தார்.

ஆனால் தமக்குத் தெரிந்தவரை அவர் கைது செய்யப்படவில்லை என்றார் நிதிமந்திரி திரு. பீலிக்ஸ் டயஸ்.

வவனியா மெம்பர் திரு. டி. சிவசிதம்பரம்தான் காவலில் வைக்கப்பட்டிருப்பதாயும், பெயரில் ஒரு குழப்படி ஏற்பட்டிருக்கலாமென்றும் ஒரு அரசாங்க மெம்பர் கூறியதற்கு, இப்படி ஏற்பட்டிருப்பது சாத்தியமென்றும் வவனியா மெம்பர், திரு. டி. சிவசிதம்பரம் காவலில் வைக்கப்பட்டிருப்பதாயும் நிதிமந்திரிகூறினர்.

இராணுவமும், பொலிசும் அறிந்தவரை உடுப்பிட்டி எம். பி. திரு. எம். சிவசிதம்பரம் எச்சம்பவத்திலும் சிக்கவில்லை என்றும், கைது செய்யப்படவோ காவலில் வைக்கப்படவோ இல்லை என்றும் யாழ்ப்பாணத்திலுள்ள இராணுவ அதிகாரி, "ஈழநாடு" பிரதிநிதியிடம் கூறியதாக சென்ற புதன்கிழமை பிரசுரித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

(மற்ற விவரங்கள் 2-ம் பக்கம் காண்க.)

## 'கியூபா தலைநகரில் அமைதி நிலவுகிறது'

### ஐ. நா. அரசியல்கமிட்டியில் விவாதம் ஒத்திவைப்பு

நியூயோர்க், ஏப்ரல் 20

கியூபா பற்றிய விவாதத்தை ஐ.நா. அரசியல் கமிட்டி இன்று ஒத்திவைத்தது.

கியூபா பிரச்சினை இந்தியாவின் சர்வதேச பிரச்சினையைப் பழித்திருக்கிறது என பிரதம மந்திரி நேரு கூறினர்.

தற்போதைய பிடல்காஸ்ட்ரோவின் அரசாங்கத்தையே இந்தியா அங்கீகரித்திருப்பதாயும் காஸ்ட்ரோ அரசாங்கம் நீடிப்பதைத்தான் இந்தியா விரும்பும் என்று நேரு தொடர்ந்து கூறினர்.

கியூபா சம்பந்தமாக ஐ. நா. அரசியல் கமிட்டியில் 4 தீர்மானங்கள் கொண்டு வரப்பட்டன. ரஷ்யா, ருமேனியா, மெக்ஸிகோ ஆகிய நாடுகள் ஒவ்வொரு தீர்மானமும், 7 லத்தீன் அமெரிக்க நாடுகள் கூட்டாக ஒரு தீர்மானமும் கொண்டு வந்தன.

அமெரிக்க பிரதிநிதி திரு. ஸ்டீவன்ஸன் கமிட்டியில் பேசும் போது கியூபாவில் கஸ்ட்ரோவின் கொடிய ஆட்சியை எதிர்த்து நடைபெறும் போராட்டம் இன்னும் வெற்றி பெறவில்லை என்றும், தொடர்ந்து போராட்டம் நடைபெறுமென்றும் குறிப்பிட்டார். கியூபாவில் அமெரிக்கத் தலையீடு இல்லை என்றும் அவர் கூறினர்.

கியூபாவின் தலைநகர் ஹாவானாவிலிருந்து முதன் முறையாக வெளி உலகுக்கு மீண்டும் இன்று தந்தித் தொடர்புகள் ஆரம்பமாயின. ஹாவானாவில் அமைதி நிலவுவதாய் அங்குள்ள கானடா ஹைகமிஷனர் தெரிவித்துள்ளார்.

கியூபாவில் தம் உடமைகளைப் பாதுகாக்கும் பொருட்டு இரு பிரிட்டிஷ் யுத்தக் கப்பல்கள் புறப்பட்டிருப்பதாக ஒரு செய்தி கூறிகிறது.

புளோரிடாவில் கேட்கப்பட்ட ஒரு வானொலிச் செய்தியின்படி, புரட்சிப்படைகளை எதிர்த்த கியூபா துருப்புக்களுக்கு திரு. பிடல்காஸ்ட்ரோ நேரடியாக தலைமை தாங்கி யுத்தம் நடத்தியதாயும், புரட்சித் தலைவரின் புதல்வர் இந்தச் சண்டையின் போது கைது செய்யப்பட்டதாயும், புரட்சிக்காரரிடமிருந்து வடஅமெரிக்காவில் செய்யப்பட்ட ஷெர்மான் டாங்கிகளும், யந்திரத் துப்பாக்கிகளும், இதர ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டதாயும் கூறப்பட்டது.

## அங்கோலா பற்றி ஆராய ஐந்து நாடுகள் கமிட்டி

நியூயோர்க் ஏப்ரல் 21

போர்த்துக்கல் காலனியான அங்கோலா நிலைமை பற்றி ஆராய, ஐந்து நாடுகளைக் கொண்ட கமிட்டி ஒன்றை நியமிப்பதென ஐ. நா. பொதுச் சபை தீர்மானித்தது. இது சம்பந்தமான பிரேரணையை 36 ஆசிய ஆபிரிக்க நாடுகள் சமர்ப்பித்தன. ஐ. நா. இது பற்றி விவாதிக்க அதற்கு உரிமை கிடையாது என போர்த்துக்கல் சபையில் வாதித்தது.

## அரசாங்க ஊழியருக்கு சிங்களப் பரீட்சை

கொழும்பு ஏப்ரல் 21

இலங்கைப் பரீட்சைப்பகுதி அரசாங்க ஊழியரின் முதலாவது சிங்கள தகுதிப்பரீட்சையை செப்டெம்பர் மாதம் நடாத்தும்.

அதன்பின் வருடத்துக்கு இருமுறை இத்தகுதிப்பரீட்சை நடாத்தப்படும். எழுத்துப் பரீட்சையிலும் வாய்மூலப் பரீட்சையிலும் 50 வீதம் புள்ளிகள் பெற்ருரே பரீட்சையில் தேறியவராவர்.

இப்பரீட்சைகள் 4 பகுதிகளாக இருக்கும். முதற்பகுதி அல்லது மூன்ருவதுபகுதி தேர்வுக்குரிய பரீட்சைகள் பரீட்சைக்குத் தோற்றுவோருக்குரிய அறிவித்தல்கள் தமிழில் அல்லது ஆங்கிலத்தில் இருக்கும்.

சகல அரசாங்க இலாக்காக்களுக்கும் இது பற்றிய சுற்றறிக்கை அனுப்பப்பட்டுள்ளன.

## ஆஸ்பத்திரி நிதி சேர்க்க ஊர்வலம்

கொழும்பு ஏப்ரல் 21.

நாளை முதல் 1 வாரத்திற்கு பக்தி கீதங்களுடன் மாணவர்களின் ஊர்வலம் ஒன்று நகர் வலம் வருமென்றும், ஊர்வலத்தில் அவர்கள் நன்கொடை திரட்டுவார்களென்றும், அதில் சேரும் நிதி, ஆஸ்பத்திரி நன்மை சேவையில் சேர்க்கப்படுமென்றும் அறிவிக்கப்பட்டது.

## துறைமுகத்துக்கு வெளியில் 4 கப்பல்கள்

கொழும்பு, வெள்ளி

கொழும்புத் துறைமுகத்துக்கு வெளியில் நேற்று 4 கப்பல்கள் நங்கூரம்பாய்ச்சி நிறுத்தப்பட்டன.

மேலும் 10 கப்பல்கள் வரக்கூடும் என்று நேற்றிரவு எதிர்பார்கப்பட்டது. துறைமுகத்துக்குள் ஏற்கனவே 52 கப்பல்கள் நிற்கின்றன. மேற்கொண்டு கப்பல்கள் நிறுத்துவதற்கு அங்கு இடம் போதாது.

கடந்த சில தினங்களாக நிலவிய அசாதாரணமான காலநிலை காரணமாக துறைமுகத்தில் இறக்குமதி வேலைகள் சுறுசுறுப்பாக நடைபெறவில்லையென்றும், அதன் காரணமாகவே சரக்குக் கப்பல்கள் பலநாட்களுக்கு துறைமுகத்தில் காத்துக்கிடக்க வேண்டிய நிலை ஏற்பட்டதென்றும் அறியப்படுகிறது.

## இலங்கைக்கு மேலும் ஐந்து உபகாரச் சம்பளம்

### செக்கோஸ்லோவேகியா-இலங்கை கலாச்சார பரிவர்த்தனை

கொழும்பு, வெள்ளி

இலங்கை மாணவர்களுக்கு பொறியியல் துறையில் பயிற்சியளிப்பதற்கு மேலும் 5 உபகாரச் சம்பளங்களை வழங்க செக்கோஸ்லோவேகியாமுன்வந்துள்ளது. பானவக்கூத்து நிபுணர் ஒருவரையும், புதைபொருள் ஆராய்ச்சி நிபுணர்களையும் செக்கோஸ்லோவேகியா இலங்கைக்கு அனுப்பும். கல்வி, கலாச்சார பரிவர்த்தனை சம்பந்தமான உடன்பாட்டில் இவ்வாறு கூறப்பட்டுள்ளது. 'ஆயுர்வேத வைத்தியம் சம்பந்தமான நூல்களை இலங்கை செக்கோஸ்லோவேகியாவுக் களிக்கும். பாலி முதலிய கீழ்த்தேச மொழிகளைக் கற்க இலங்கைப் பல்கலைக்கழகம் செக். மாணவர்களுக்கு உபகாரச்சம்பளம் வழங்கும். இவ்வாண்டு மந்திரி திரு. மைத்திரிபால சேனநாயக்கா தலைமையில் இலங்கை கலாச்சார தூது கோஷ்டி ஒன்று செக்கொஸ்லோவேகியா செல்லும் என்று அறிவிக்கப்பட்டது.

## சென்னைக்கு 4 பாலங்கள்

சென்னை, ஏப்ரல் 21

சென்னை நகரில் 4 பாலங்களைக் கட்டுவதற்காக நகராட்சி மன்றத்திற்கு 4 லட்சம் ரூபாய் கடன்தர தமிழ்நாடு அரசாங்கம் இணங்கியுள்ளது.

## புதிய வைத்தியசாலை திறப்புவிழா

யாழ்ப்பாணம் ஏப்ரல், 22

யாழ்ப்பாணம் முஸ்லிம் மகளிர் கல்லூரிவீதியில், ஸ்ரீஇராசபூரண சித்த ஆயுள்வேத ஹோமியோபதி புதிய வைத்தியசாலையை நேற்றுகாலை, முன்னுள் ஆடிட்டர் ஜெனரல் திரு. கே. கனகரத்னம் திறந்துவைத்தார். அச்சமயம் அவர் சேசுகையில், நாட்டு வைத்தியத்தின் சிறப்பையும், அதை அபிவிருத்தி செய்ய வேண்டியதையும் கூறி, இந்த வைத்தியசாலையை நடத்தும் டாக்டர் கனகரத்னம் தம்பதிகளின் சேவையைப் பாராட்டி வாழ்த்தினர்.

## மரமரியும் தொழிற்சாலை

வருகிற 24-ம் தேதி மதவாச்சியில் மரமரியும் இயந்திரத் தொழிற்சாலை ஒன்றை மந்திரி திரு. ஸி. பி. டி. சில்வா துவக்கி வைப்பார். ஏற்கனவே இவ்விதத் தொழிற்சாலைகள் இரண்டு, நாட்டில் செயல் படுகின்றன.

## கூட்டுறவு பாட போதனை

புதுடில்லி, ஏப். 20

பள்ளி மற்றும் கல்லூரி கட்டடங்களில் பொதுக் கல்வியின் ஒரு பகுதியாக கூட்டுறவு பற்றி போதிப்பது படிப்படியாக அதிகரிக்கப்படவேண்டுமென்று அரசாங்கம் நியமனம் செய்துள்ள ஓர் நிபுணர் குழு சிபார்சு செய்துள்ளது.

கூட்டுறவு பயிற்சிக்காக தேசிய போர்டு ஒன்று அமைக்கவேண்டுமெனவும் இக்குழு யோசனை கூறியுள்ளது.

கூட்டுறவு பாடபோதனைப் பயிற்சிக்காக மூன்ரும் திட்டக் காலத்தில் ரூ. 1247 லட்சம் செலவிலான ஒரு திட்டத்தையும் இக்குழு சிபார்சு செய்துள்ளது.

## லாவோஸில் சீக்கிரம் யுத்தநிறுத்த வேண்டுகோள்

புதுடில்லி, ஏப்ரல் 20

லாவோஸில் சண்டைநிறுத்த ஒப்பந்தம் விரைவில் ஏற்படுமெனத் தோன்றுவதாய் ஸ்ரீநேரு இன்று அறிவித்தார். எவ்வளவு சீக்கிரம் யுத்தநிறுத்தம் அங்கு ஏற்படுகிறதோ அவ்வளவுக்கவ்வளவு அது நல்லது என்றும் அவர் கூறினர்.

மாஸ்கோவில் பிரிட்டிஷ் தூதர் ரஷ்ய வெளிநாட்டு மந்திரியைச் சந்தித்துப்பேசினர். அதன்பின் அவர் வெளியிட்ட அறிக்கையில் "இன்றில்லாவிட்டாலும், சண்டையை நிறுத்தும்படி கோரும் ரஷ்ய-பிரிட்டிஷ் கூட்டுவேண்டுகோள் சீக்கிரம் ஏற்படும்" என அவர் கூறினர்.

**மணிவாக்கு**

"நம்பினோர் கெடுவதில்லை
நான்கு மறைத்தீர்ப்பு"
—அமரகவி பாரதியார்

# ஈழநாடு

EELA NADU

யாழ்ப்பாணம் பிலவ ஆண்டு
சித்திரை மீ 10 உ (22-4-61)

EELA NADU: National Tamil Daily Post Box 49, Jaffna
Telegrams EELA NADU Jaffna
Phone: 389.


## வடக்கிலும் கிழக்கிலும்

யாழ்ப்பாணத்துக்கு நேரில் வந்து பார்த்த நிதிமந்திரி திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயகா தாம் கண்டதையும் தமது கருத்தையும் பார்லிமெண்டில் சென்ற வியாழனன்று விரிவாக விளக்கினர். சட்டமும் ஒழுங்கும் வடக்கிலும் கிழக்கிலும் பேச்சளவில் மட்டுமின்றி உண்மையிலேயே நிலைநாட்டப்பட்டுள்ளதாயும், அங்கு மனக்கசப்பு எதுவுமிருப்பதாகத் தெரியவில்லை என்றும்கூறினர்.

நிதிமந்திரி கூறியது போல் இரு மாகாணங்களிலும் சட்டமும்ஒழுங்கும் நிலைநாட்டப்பட்டதாயின், அவசரகால பிரகடனத்தை நீடிக்க வேண்டிய அவசியமெதுவுமில்லை என்று, டாக்டர் கொல்வின் ஆர். டி'ஸில்வா சரியாகச் சுட்டிக் காட்டினர். என்றாலும் மீண்டும் சில நாள் கழித்துத் தம்மை யாழ்ப்பாணத்துக்குச் சென்று பார்த்து நிலைமைபற்றி தெரிவிக்குமாறு பிரதமந்திரி கேட்டுள்ளதாக அறிவித்தார். ஆகவே அவர் மீண்டும் வந்து பார்ப்பதற்கிடையே ஊரடங்குச் சட்டமும் அவசரகாலபிரகடனமும் ரத்து செய்யப்படுமென்று அநேகமாக எதிர்பார்ப்பதற்கில்லை.

இதற்கிடையே வெள்ளவத்தை பிரதிநிதி சுட்டிக் காட்டியது போல் ஒரு குறிப்பிட்ட பகுதியின் தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகள் அனைவரும் காவலில் வைக்கப்பட்டிருப்பதால், அங்குள்ள மக்களுக்குத்தங்களது குறைகளை எடுத்துச் சொல்ல யாருமில்லை. சென்ற முறை அவசரகால பிரகடனம் செய்யப்பட்டிருந்த போது பார்லிமெண்ட் சபையின் ஒரு கமிட்டி நியமிக்கப்பட்டிருந்தது. அத்துமீறி நடைபெறும் சம்பவங்களைப்பற்றி எதிர்க்கட்சித் தலைவர்களுக்கு அந்தரங்கமாகத் தெரிவிக்க, அக்கமிட்டி மிகவும் பயன்பட்டதென்றும், இப்போதும் அதேபோல ஒரு கமிட்டியை நியமிக்க வேண்டுமென்றும் டாக்டர் ஸில்வா கேட்டுக்கொண்டார். இந்த யோசனையின்படி நடப்பது, நாட்டிலே அவசரகாலத்தில் அத்துமீறிய செயல்களைக் குறைக்கவும், அமைதியை சீக்கிரத்தில் நிலைநாட்டவும், பெரிதும் உதவும்.

அவசர நெருக்கடி காலத்தில், ஒரு சிலரது அத்துமீறிய காரியங்களால் பாதிக்கப்பட்ட மக்கள் தங்கள் குறைகளை எடுததுச் சொல்லி கஷ்டநிவாரணம் பெற வசதி வேண்டியது அவசியமாகும். தங்கள் பிரதிநிதிகளின் உதவி இல்லாத நிலையில் பார்லிமெண்டும் இடையே கூடாமல் இருக்கும்போது முறையிடுவதற்கான வசதியும் அவசியமான கஷ்ட நிவாரணம் பெறவும் வழியில்லாதிருப்பது பெரிய குறை. பல கட்சி பிரதிநிதிகளுமடங்கிய பார்லிமெண்டரி கமிட்டி நியமிக்கப்பட்டால், அதன் மூலம் இக்குறை தீர ஓரளவு முடியக்கூடும். இந்த யோசனையை பிரதமரிடம் தெரிவிப்பதாக நிதிமந்திரி கூறியுள்ளார். இதன்படி கமிட்டியும் நியமிக்கப்பட்டால், மற்ற கட்சிகளின் ஒத்துழைப்பையும் அரசாங்கம் பெறவும் சகஜ நிலை சீக்கிரத்தில் ஏற்படவும் முடிவதாக இருக்கும்.

# எந்த சிவசிதம்பரம்?

# உடுப்பிட்டியா? வவனியாவா?

## பார்லிமெண்டில் பெயர்க் குழப்பம்!

## யாழ்ப்பாணத்தில் நிதி மந்திரி அனுபவம்

கொழும்பு வெள்ளி

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் அமைதி நிலவுவதாக நேற்று முன்தினம் பிரதிநிதிகள் சபையில் ஒத்திவைப்புப் பிரேரணைமீது பேசுகையில் நிதி மந்திரியும், பாதுகாப்பு வெளி விவகார அமைச்சின் பார்லிமெண்ட் காரியதரிசியுமான திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா கூறினர்.

பிரதம மந்திரியின் உத்தரவின்மீது தாம் யாழ்ப்பாணம் சென்று நிலைமையை அறிந்து வந்ததாக நிதிமந்திரி கூறினர்.

அரசாங்க காரியாலயங்கள் யாவும் செவ்வனே நடைபெறுவதாகக் கூறிய அவர் மேலும் குறிப்பிட்டதாவது:-

அவசரகால நிலைமை பிரகடனமான சிறிது நேரத்தின் பின் சத்தியாக்கிரகம் நடைபெற்ற பகுதிகளில் ஊரடங்குச் சட்டமும் அமுலுக்கு வந்தது. இரண்டு இடங்களைத் தவிர மற்ற எல்லா இடங்களிலும் 48 மணி நேர ஊரடங்குச் சட்டம் அமுலாக்கப்பட்டது.

முக்கிய காரணங்களின் நிமித்தம் ஊரடங்குச் சட்டம் அமுலிலுள்ள நேரத்தில் அரசாங்க ஊழியரால் காரியாலயங்களுக்குச் செல்ல முடியவில்லை. நேற்றுக்காலையிலிருந்து மாலைவரை ஊரடங்கும் சட்டம் தளர்த்தப்பட்டது.

நான் காலை 7.30 மணிக்கு யாழ்ப்பாணம் சேர்ந்தேன்.

கச்சேரியில் காலை 9 மணிக்கு 193 ஊழியர்களில் 114 பேர் வேலைக்குத்திரும்பினர். அன்று பிற்பகுதியில் மேலும் ஏராளமானவர்கள் வேலைக்கு வந்தனர். கீழ்க்காணும் கந்தோர்களில் 100 சத விகிதம் ஊழியர்கள் வேலைக்குத் திரும்பியிருந்தனர்:

பகுதி விவசாய கந்தோர், விவசாய சேவை உதவி கமிஷனர் கந்தோர், கலால் கந்தோர், பிராந்திய வன இலாகா கந்தோர், உதவி உணவுக் கட்டுப்பாட்டதிகாரி கந்தோர், ரஸ்தா போக்கு வரத்துக் கந்தோர், ஸ்தலஸ்தாபன உதவிக் கமிஷனர் கந்தோர், கல்விக் கந்தோர் நில பதிவுக் கந்தோர் மாஜிஸ்டிரேட், மாவட்ட நீதி மன்றங்கள், மராமத்து என்ஜினியர்கள் கந்தோர், கலால் குதம், தொழில் கந்தோர்,.

### குப்பைகள்

வேலை தொடங்கப்பட்டது. ஆனல் கடந்த 57 தினங்களாக பெருகிக் கிடந்த குப்பைகளைப் பெருக்குவதில் அதிக நேரம் செலவாகியது.

மக்கள் தமது சாதாரண வேலைகளைக் கவனித்து வருவதும், வீதிகளில் வழமைபோல் நடமாடுவதும் தெரிந்தது.

தெருக்களில் மக்கள் நிம்மதி பெற்றவர்களாகக் காணப்பட்டார்கள். என்னை அடையாளம் கண்டு சில இடங்களில் வந்தனம் செலுத்தினர். எதிர்ப்பு எதுவும் இருக்கவில்லை.

சில அரசாங்க ஊழியர்கள் என்னுடன் பேசினர்கள். கச்சேரியில் ஏராளமாக கூட்டுறவு சங்கங்களின் பிரதிநிதிகள் அரிசி பெற வந்திருந்தனர்.

### அரிசி

அரிசி, மா, வழங்கப்பட்டது. ஞாயிற்றுக்கிழமையளவில் எல்லா வாடிக்கைக்காரருக்கும் அரிசி கிடைத்துவிடும்.

காலை 10-30 மணிக்குமேல் சயரோக, மற்ற நிவாரணப் பணங்கள் வழங்கப்பட்டன.

ரயில், பஸ் சேவை வழக்கம்போல் இருந்தது. பருத்தித்துறையில் சில பிரயாணிகள் பஸ்ஸில் ஏறிகட்டணம்செலுத்த மறுத்தபோது எதுவித அசம்பாவிதமும் நடக்கவில்லை. அவர்கள் பொலிஸ் நிலையத்துக்கு கொண்டுபோகப்பட்டனர். கட்டணம் செலுத்தாமல் பிரயாணிகளை ஏற அனுமதிக்க வேண்டாமென இ. போ. ச. உத்தரவிட்டிருக்கிறது.

### இரண்டு சம்பவங்கள்

இரண்டு சம்பவங்களைப் பற்றி நான் சபைக்கு அறிவிக்க வேண்டியிருக்கிறது.

அவசரகாலம் பிரகடனமான தினத்தில், வல்வெட்டித்துறையில் ரோந்து சென்ற சிப்பாய் ஒருவர் 12 நபர்களால் சூழப்பட்டார். கைகலப்பில் சிப்பாயின் 'ரைபிள், பறிக்கப்பட்டது. அவருடன் சென்ற மற்ற இரு சிப்பாய்களும் துப்பாக்கிப் பிரயோகம் செய்ய வேண்டிய நிர்ப்பந்தத்துக்குள்ளானர்கள். அதனல் 3பேர் யாழ்ப்பாண ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்கள். ஒருவருக்கும் பலத்த காயம் ஏற்படவில்லை.

புதன்கிழமை பருத்தித்துறையில் ஒருசந்தியில்சார்ஜன்ட் ஒருவரின் அதிகாரத்தின் கீழ் சென்றுகொண்டிருந்த ராணுவ ரோந்து லொறியொன்றின்மீது கற்கள் வீசப்பட்டன. லொறியின் கண்ணடி நொறுங்கியது சாரதி வேறு வழியில் லொறியைச் செலுத்த முற்பட்டார். சாரதி கீழே இறங்கியபோது சூழ்ந்துகொள்ளப்பட்டு கற்களால் தாக்கப்பட்டார். அதன் பின் ஒரு சிப்பாயும் வேறு நால்வரும் திரும்பிப்போக வழியிருக்கிறதாவென்று பார்க்க கீழே இறங்கினர். வழி மறிக்கப்பட்டிருந்தது. அதன் பின் ராணுவத்தினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். அதன் பின்னர் கூட்டம் கலைந்தது. ஒருவர் கொல்லப்பட்டார். வேலன் கிட்ணன் என்பது அவர் பெயர். அவருக்கு 42 வயது என்று தெரிகிறது.

இறந்த கிட்ணன் சம்பந்தமாக விசாரணை நடத்தப்பெற்றது. டெலிபோன் கம்பிகள் துண்டிக்கப்பட்டது போன்ற சில சம்பவங்களைத் தவிரவேறு சம்பவங்களெதுவும் நிகழவில்லை.

டாக்டர்களுக்கும், தாதிமார்களுக்கும், மருத்துவப்பெண்களுக்கும் பெர்மிட்டுகள் வழங்கப்படும்.

மன்னர், வவனியா. திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய இடங்களில் அமைதி நிலைநாட்டப்படுகிறது.

இன்னும் சில நாட்களுக்குப் பின் மீண்டும் யாழ்ப்பாணம் சென்று அங்குள்ள நிலை பற்றி அறிவிக்குமாறுபிரதமர் என்னை கேட்டுள்ளார்.

### பெயர்க் குழப்பம்

திரு. எட்மன் சமரக்கொடி பேசுகையில் துப்பாக்கிப் பிரயோகம் பற்றிய இரண்டொரு வதந்திகள் நிதியந்திரியின் அறிக்கை மூலம் உறுதிப்படுத்தப் பட்டுள்ளனவென்ருர்.

கைது செய்யப்பட்ட எம். பி. ஒருவர் கடுமையாகத் தாக்கப்பட்டதாகவும் அவரின் விலா எலும்புகளிரண்டு உடைந்து போனதாகவும் அவர் உடுப்பிட்டி எம். பி. திரு. சிவசிதம்பரமென்றும் வதந்தி உலவியதாகக் குறிப்பிட்ட திரு. எட்மன்ட் சமரக்கொடி அந்த வதந்தி உண்மை தானு? என்று கேட்டார்.

நிதிமந்திரி பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா பதிலளிக்கையில் திரு. சிவசிதம்பரம் இறந்து விட்டதாக நேற்றுக் காலையில் தான் கேள்விப்பட்டதாகவும் ஆனல் திரு. சிவசிதம்பரம் தடுப்புக் காவலில் கூட இல்லையென்றும் தெரிவித்தார்,

**சபாநாயகர்:**- அவர் காவலில் வைக்கப்பட்டுள்ளார். நான் தான் அதை அறிவித்தேன்.

**டாக்டர் கொல்வின் ஆர், டி சில்வா:**- இது என்னவிதமான அறிக்கை? உண்மை விபரம் கூட அவருக்கு (நிதிமந்திரி) தெரியவில்லையே.

திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா தொடர்ந்து கூறியதாவது:-

நேற்றுக் காலை 7 மணிக்கு கொழும்பிலிருந்து புறப்படும் வரையோ அல்லது யாழ்ப்பாணத்திலிருந்து பிற்பகல் 4 மணிக்குப் புறப்படும் வரையோ திரு. சிவசிதம்பரத்தின் மீது தடுப்புக்காவல் உத்தரவு பிறப்பிக்கப்படவும் இல்லை; தடுப்புக் காவலில் வைக்கப்படவும் இல்லை.

இச் சமயம் அரசாங்கக் கட்சி எம். பி. ஒருவர் குறுக்கிட்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டவர்களின் பெயர் பற்றி சபாநாயகர் வாசித்த பெயர்ப் பட்டியலில் வவனியா எம். பி. சிவசிதம்பரம் உடுப்பிட்டி எம். பி. சிவசிதம்பரம் பற்றிக் குழப்பம் ஏற்பட்டிருக்கலாமென்ருர்.

இந்தப் பெயர்க் குழப்பம் ஏற்படுவது சாத்தியம் என்று கூறிய திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டார நாயக்கா வவனியா எம். பி. தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளாரென்ருர். "என்ருலும் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளவர் எவரும் காயமடையவில்லை"என்றுதிரு. பண்டாரநாயக்கா கூறினர்.

### கொல்லப்பட்டவர் இலங்கைத் தமிழரா?

"துப்பாக்கிப் பிரயோகத்தில் கொல்லப்பட்டவர் இலங்கைத்தமிழரா?" என்று திரு ரோய் ராஜபக்ச கேட்டார்:

**நிதிமந்திரி:**-

எனக்குத் தெரியாது. அது பற்றிக் கேட்க எனக்கு அந்த நேரம் ஞாபகம் வரவில்லை!

**திரு.ராஜபக்ச:**-

அவர் ஒரு கள்ளத்தோணியாகவுமிருக்கலாம்-

**நிதி மந்திரி:**-

அவர் ஒரு கள்ளத்தோணியாக இருந்தாலும், ஒரு உயிர் பலியாகிவிட்டது!

டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா பேசுகையில் பின்வருமாறு கூறுனர்:-

சென்ற அவசரகால நிலைமையின்போது சபையில் ஒரு குழு நியமிக்கப்பட்டது. நாட்டின் உண்மை நிலை பற்றி இக்குழுவுக்குத் தெரிவிக்கப்பட்டது. நாட்டுக்குத் தெரிவிப்பது நல்லதல்லதென்று அரசாங்கம் கருதியவைகளை எதிர்க்கட்சியினருக்கு தெரிவிக்கும் நோக்கத்துடன் இக்குழு நியமிக்கப்பட்டிருந்தது.

அவசரகால நிலைமையின் போது சில தகவல் வெளியிட ஒரு அரசாங்கம் தயங்குவது இயல்பு.ஆனல் இத்தகவல் சபைக்குத் தெரிவிக்கப்படலாம், சபை ஒருபொழுதும் அந்தரங்கத்தில் கூடியதில்லை. எனவே சகல சம்பவங்களும் குழுவுக்குத் தெரிவிக்கப்பட்டு வந்தது.

எடுக்கப்படும் நடவடிக்கைகள் பற்றித்தான் அக்குழுவுக்கு முக்கிய கவனம்.

குறிப்பிட்ட ஒருபகுதியின் தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகள் பொதுவாழ்விலிருந்து

(4-ம் பக்கம் பார்க்க)

## ஐயாறன் எழுதுவது

ஆறு வாரங்களுக்குப் பிறகு நேற்று யாழ்ப்பாணத்தில் பல சங்கக்கடைகளிலும் ரேஷன் அரிசி விற்றனர். இவ் வார ரேஷன், வெள்ளி, சனி இவ்விரண்டு நாட்களுக்குள் விநியோகமாகிவிடுமென்று தெரிகிறது. பொதுமக்களுக்கு இது பெரிய கஷ்டநிவாரணமாகும்.

"ஒரு நாள் உணவை ஒழி என்ருல் ஒழியாய், இரு நாளைக்கு ஏல் என்ருல் ஏலாய், ஒரு நாளும் எந்நோ வறியாய் இடும்பை கூர் என் வயிறே உன்னேடு வாழ்தலரிது" என்ருர் தமிழ்ப்பாட்டி.

ஒரு நாள் அல்ல, ஒருவேளை கோப்பிக்கு சற்று தவக்கம் ஏற்பட்டுவிட்டாலே நாம் என்ன பாடு படுகிருேம். அப்படியிருக்க 6 வாரகாலம் இங்கு மக்கள், சிறப்பாக வறிய குடும்பத்தார் என்னென்ன சங்கடப் பட்டார்களோ!

⁂ ⁂ ⁂

யாழ்ப்பாண மாவட்டத்தில் மொத்தம் கூப்பன்கள் எண்ணிக்கை 5 லட்சத்து 70 ஆயிரமாம். ஒரு கூப்பனுக்கு ஒரு வாரத்தில் இரண்டு கொத்து அரிசிக்கும் அரசாங்கம் சுமார் ஒரு ரூபாய்க்கு மேல் உதவிப் பணம் கொடுக்கின்றது. இதன்படி கணக்கிட்டுப் பார்த்தால், ஒரு வாரத்துக்கு 5 லட்சத்து 70 ஆயிரம் ரூபாய் ஆகும். ஆறு வாரங்களுக்கும் கூப்பன் அரிசி கிடைக்காததினல், யாழ்ப்பாணப் பொதுமக்களுக்கு, 34 லட்சத்து 20 ஆயிரம் ரூபாய் நஷ்டமாகும். அதாவது அரசாங்கத்துக்கு இத்தனையும் லாபம்.

இங்கு பொதுமக்களின் நன்மையில் விசேஷ கவலை காட்டுவதாகக் கூறும் அரசாங்கம் அடுத்த சில வாரங்களுக்கு அந்த நஷ்டத்தை ஈடுசெய்யும் அளவுக்கு கூப்பன் அரிசியை இலவசமாகக் கொடுக்கக் கூடாதா? என்று ஓர் அன்பர் கேட்கின்ருர். இது நியாயமான யோசனையே. கிடைக்குமா? என்பது வேறுவிஷயம். ஆனல் இதை எடுத்துச்சொல்லவும் யார் இருக்கிருர்கள்?

⁂ ⁂ ⁂

கனடாவிலே இந்திய ஹைகமிஷனர் காரியாலயத்தின் மிமுதலாவது காரியதரிசி சங்கரப்பிள்ளை சுட்டுக்கொல்லப்பட்ட செய்தியைக்கேட்டு திடுக்கிட்டேன். அவர் இலங்கையிலே இந்திய ஹைகமிஷன் காரியாலயத்தில் சில வருடம் வேலை பார்த்தவர். அமைதியானவர். வேலையில் திறமை மிக்கவர். இளம்வயது பலருக்கும் உதவியாக இருந்திருக்கிருர். கனடாவிலே அவரை ஒரு யூகோஸ்லேவியாக்காரர் கொலை செய்ததாகக் கைது செய்யப்பட்டிருக்கிருராம். கொலைக்கு என்ன காரணம் இருக்குமென்று தெரியாமல் திகைத்தேன்.எவ்வளவு தூரம் போனல் விதி விடுகிறதா?

⁂ ⁂ ⁂

பாரிஸ்டர் ஜி. ஜி. பொன்னம்பலம், சென்னை ஹைகோர்ட்டில் ஓர் அப்புக்காத்தாகப் பதிவு செய்து கொண்ட செய்தியைப் பற்றி பலரிடை பேச்சாக இருக்கிறது.

அங்குகோவை கள்ளநோட்டு வழக்கில் ஓர் எதிரிக்காக ஆஜராவதற்காக அவரை அழைத்திருப்பதாகவும், அதற்காகவே அவர் தம்மை அந்தக் கோர்ட்டில் பதிவு செய்து கொண்டதாயும் ஓர் அன்பர் கேள்விப்பட்டதாகக் கூறுகின்ருர்.

⁂ ⁂ ⁂

என் இலங்கை நண்பரொருவர் இந்தியப் பெண்ணைக் கல்யாணம் கட்டினர். சமீபகாலம் வரை மனைவியை எப்படி இலங்கை பிரஜையாக்குவது என்று யோசனை செய்துவந்த அவர், இப்போது, தாம் இந்தியா பிரஜையாக முடியுமா? என்று யோசனை செய்து வருகின்ருர்!

# ‘கியூபாவை கம்யூனிஸ்டுகளுக்கு விட்டுவிடமாட்டோம் எமது பொறுமைக்கும் ஒரு அளவுண்டு’

—அதிபர் கெனடி

வாஷிங்டன், ஏப்ரல் 21

கியூபாவைக் கம்யூனிஸ்டுகளுக்கு விட்டுக் கொடுக்கும் எண்ணம் அமெரிக்காவுக்கு இல்லையென்று அதிபர் கெனடி இன்று அறிவித்தார்.

வாஷிங்டனில் பத்திகாசிரியர்கள் ஆண்டுவிழாவில் வெளியிடுவதற்காக அவர் தயாரித்திருந்த அறிக்கையில் மேற்கண்ட கருத்தை வெளியிட்டிருக்கிறார். இந்த அறிக்கை இன்று வெள்ளை மாளிகை அதிகாரியொருவரால் வெளியிடப்பட்டது.

காஸ்டிரோ அரசாங்கத்துக்கெதிராகக் கியூபாவில் படையெடுக்கப்பட்டபோது, அமெரிக்கா தன் இச்சைப்படி தலையிட்டுக் காரியங்கள் செய்திருந்தால் அதன் நற்பெயர் கெட்டிருக்குமென்றும், அம்மாதிரி அமெரிக்கா செய்யவில்லையென்றும், கூறியுள்ள அமெரிக்க ஜனதிபதி, “அமெரிக்காவின் பொறுமைக்கும் ஒரு அளவுண்டு” என்று எச்சரித்திருக்கிறார்.

கம்யூனிஸ்டு ஆதிக்கம் அமெரிக்க எல்லைக்குள் நுழைவதை அனுமதிக்க முடியாது என்றும் கெனடி தமது அறிக்கையில் தெரிவித்திருக்கிறார்.

### எதிர்ப்பு ஒழிந்தது

கியூபாவில், காஸ்டிரோ அரசாங்கத்துக்கு எதிரான கிளர்ச்சிக்காரர்களின் படையெடுப்பு முற்றாக ஒடுக்கப்பட்டுவிட்டதாகக் கியூபா அரசாங்கம் அறிவித்திருக்கிறது.

படையெடுத்தவர்களை எதிர்த்து நடைபெற்ற சண்டைகளில் இரு தரப்புக்கும் பலத்த ஆள்சேதம் ஏற்பட்டதாகவும் அறிவிக்கப்பட்டது.

கியூபாவில் பயங்கரவாதிகள் என்று கூறப்பட்ட இருவருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டிருக்கிறது. கியூபா தலைநகரான ஹவானாவில் 20 அமெரிக்கர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

### இலங்கை கவலை

கியூபாவில் ஏற்பட்டுள்ள நிலைமை குறித்து இலங்கை பெரிதும் கவலை கொண்டிருப்பதாக நேற்றுப் பிரதிநிதிகள் சபையில் பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சின் பார்லிமெண்ட் காரியதரிசியும், நிதி மந்திரியுமான திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா தெரிவித்தார்.

கியூபா மக்கள் தங்கள் தகராறுகளைத் தாங்களே தீர்த்துக் கொள்வதற்கு இடமளிக்க வேண்டுமென்று இலங்கை கருதுவதாக திரு. பண்டாரநாயக்கா சொன்னார். கியூபா சம்பந்தமாக இலங்கை அரசாங்கத்தின் கொள்கை ஐ. நா.விலுள்ள இலங்கைப் பிரதிநிதிக்குத் தெரிவிக்கப்பட்டதாகவும் திரு. பண்டாரநாயக்கா பார்லிமெண்டில் கூறினார்.

### சுபசிங்க

ஐ. நா.வில் இலங்கையின் விசேஷத் தூதராகவிருப்பவரும், பந்தோபஸ்து சபையின் இம்மாத தலைவருமான திரு. டி. பி. சுபசிங்கா நேற்று கியூபா நிலைமை குறித்துப் பந்தோபஸ்து சபையில் பேசினார்.

கியூபாவில் படையெடுப்பு தோல்வியடைந்து விட்டதாகக் கிடைத்திருக்கும் செய்தி நம்பிக்கையளிப்பதாய் இருக்கிறது என்று திரு. சுபசிங்க கூறினார்.

கியூபாவில் வெளியார் தலையீடு ஏற்பட்டதாகக் குற்றஞ் சாட்டப்பட்டிருப்பது பற்றி அவர் குறிப்பிடுகையில் இம்மாதிரி நிகழ்ச்சிகள் இனிமேல் நடக்காது என்று நம்புவதாகச் சொன்னார். கியூபா மக்கள் தமது சொந்த விஷயத்தைத் தாமே முடிவு செய்து கொள்ள அனுமதிக்கப்பட வேண்டும் என்று திரு. சுபசிங்க குறிப்பிட்டார்.

### பிரிட்டன் கருத்து

கியூபாவில் அமெரிக்கா தலையிட்டிருப்பதாகக் கியூபா குற்றஞ் சாட்டியிருப்பது தெளிவாகும்வரை பந்தோபஸ்து சபை அவசரப்பட்டு எதுவும் செய்துவிடக் கூடாது என்று பிரிட்டிஷ் பிரதிநிதி கருத்து வெளியிட்டிருக்கிறார்.

---

## இளைப்பாறும் அரசாங்க ஊழியர்

கொழும்பு ஏப். 21

இளைப்பாறும் அரசாங்க ஊழியர்கள் தொடர்ந்து வேலைக்கமர்த்தப்படுவது குறித்து சம்பளக்கமிஷன் கருத்து வெளியிட்டிருக்கிறது,

விசேஷ தராதரமும், தகுதியும் தேவைப்படும் தொழில்களுக்கு இளைஞர்கள் கிடைக்காதபட்சத்திலேயே இளைப்பாறி பென்சன்பெறவிருப்பவர்கள் மீண்டும் அமர்த்தப்பட வேண்டும் என்று சம்பளக் கமிஷன் தெரிவித்திருக்கிறது.


## உங்கள் நோய்

குணப்படுத்த உத்தர வாதம். நீரிழிவுக்கு 15 நாள் மருந்து ரூ. 15-50. தொய்வுக்கு 10 நாள் மருந்து ரூ. 10-50. பல வியாதிகளுக்கும் நற்சாட்சிப் பத்திரங்களடங்கிய கற்றலோக் (Catalogue) இனம்.

வைத்தியர் பரிபூரணாநந்தர்,
கைலாசபிள்ளையார் கோவிலடி.
Advt. 91 யாழ்ப்பாணம்.



## புற்று நோய் (Cancer) மாறுதற்கு

“யோகீஸ்வர ரசம்” உபயோகியுங்கள்.

புற்று நோயை வேரறுக்கும் அரியஆயுள் வேத மருந்து. பல்லாண்டுகளாக செயல் மூலம் நிரூபிக்கப்பட்டது. இந்நோயால் பீடிக்கப்பட்டோர் நேரில் வந்து கலந்து ஆலோசிக்கவும்.

பொ. செல்லையா
ஆயுள் வேத வைத்தியர்
Advt. 110 சுந்தர்மடம்.



## விற்பனைக்கு

தெல்லிப்பளை, வீமன்காமம் குறிச்சியில், பிரசித்தியான ஒழுங்கையில், (தெல்லிப்பளை ரயில்வே ஸ்டேஷனிலிருந்து 1/4 மைல் தூரம்) 9 பரப்பு நிலமும், அதிலமைந்த 3 படுக்கை அறைகளைக் கொண்ட வீடும் தலைவாயிலும் விற்பனைக்கு உண்டு. (இந்த வீட்டில் முன்பு திருமதி வைத்திலிங்கம் பொனே குடியிருந்தார்.) வளவில், மா, பலா, தென்னை முதலியன உண்டு. அத்துடன் மேற்குறித்த காணியை அடுத்து, தென்னை, மாமரங்களைக் கொண்ட 2 பரப்பு நிலமும், அதன் அருகேயுள்ள (10 பரப்பு சொரியல் காணியில் 1/4 பங்கு ஆகிய) 2 1/2 பரப்பு நிலமும் விற்பனைக்கு உண்டு. கீழ்க் காணும் விலாசத்தில் விசாரிக்கவும்:

எஸ். ஆர். செல்வநாயகம்,
கிராண்ட் ஓட்டல்,
பீச் ரோட்,
Advt. 119 யாழ்ப்பாணம்.


## அங்கோலா அக்கிரமம்

வாஷிங்டன், ஏப்ரல் 21

போர்ச்சுகீஸ் காலனியான அங்கோலா நிலைமைகுறித்து பரிசீலனை செய்வதற்கு ஐ. நா. துணைக்கமிட்டியொன்று நிறுவப்பட வேண்டுமென்று ஆசிய ஆபிரிக்க நாடுகள் தாக்கல் செய்துள்ள தீர்மானம் பற்றி ஐ. நா. மகாசபை நேற்று பரிசீலனை செய்தது.

அங்கோலாவின் போர்ச்சுகீஸ்பாரசூட்படைகள் அப்பாவி சுதேசிகள் ஆநேகரைக் கொன்றுவிட்டதாகவும், சுதேசிக் கிராமங்கள் பல அவர்களால் அழிக்கப்பட்டுவிட்டனவென்றும், சமீபத்தில் 8 ஆபிரிக்க பாதிரிமார் கொலை செய்யப்பட்டனர் என்றும் குற்றஞ் சாட்டப்பட்டிருக்கிறது. ஏராளமான பாதிரிமார் அப்பிரதேசத்தைவிட்டே ஓடிவிட்டார்களாம்.

## வங்கி ஊழியர் வேலை நிறுத்தம் விரைவில் தீர்க்க கோரிக்கை

கொழும்பு ஏப். 21

வங்கி ஊழியர் வேலை நிறுத்தத் தகராறை விரைவில் தீர்த்து வைக்குமாறு 18 தொழிற் சங்கங்கள் அரசாங்கத்தைக் கேட்டிருக்கின்றன.

அவசரகாலநிலைமை காரணமாகவோ, அல்லது கட்டாய மத்தியஸ்தர் சபையின் தீர்ப்புக்கு விடுவதின்மூலமோ வங்கி நிர்வாகிகளின் நெருக்குதல்களுக்குள்ளாகும்படி வங்கி ஊழியர் சங்கத்தை நிர்ப்பந்திக்கவேண்டாம் என்று குறித்த 18 யூனியன்களும் அரசாங்கத்தைக் கேட்டிருக்கின்றன.

## வானவெளி மனிதன் ஒரு கம்யூனிஸ்ட்

கொழும்பு, ஏப்ரல் 20

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் டாக்டர் எஸ். ஏ. விக்கிரமசிங்காவின் 60 வது பிறந்த தினத்தைக் கொண்டாடும் முகமாக நடைபெற்ற வைபவமொன்றில் பேசிய கட்சிப் பொதுச்செயலாளர் பீட்டர்கெனமன் அண்டவெளிக்கு மனிதனை அனுப்பி மீண்டும் பூமிக்கு கொண்டுவந்துள்ள மகத்தான சாதனை குறித்து சோவியத்கம்யூனிஸ்ட் கட்சிக்கும், சோவியத் மக்களுக்கும் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் மத்தியக் கமிட்டியினதும், கம்யூனிஸ்ட்டுகளினதும் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம் என்றார்.

அண்டவெளிக்குச் சென்ற முதலாவது மனிதன் கம்யூனிஸ்ட் என்பதிலும் வானவெளிக்கு மனிதனை அனுப்பிய முதலாவது நாடு சோஷலிஸத்தின் ஜன்மபூமியென்பதிலும் நாங்கள் பெருமைப்படுகிறோம் என்றார். கம்யூனிஸத்தின் இந்த மாபெரும் வெற்றி மனித வர்க்கத்திற்கு கிடைத்த வெற்றியாகும். இந்த அபார சாதனையை ஈட்டிய அனைவருக்கும், தோழர் ககாரினுக்கும் எமது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம் என்று கம்யூனிஸ்ட் கட்சிப் பொதுச் செயலாளர் கூறினார்.

## இளைஞர் கொலை

யாழ்ப்பாணம், திங்கள்

துன்னாலை தெற்கைச்சேர்ந்த இராமலிங்கம் கந்தசாமி அதே ஊரைச் சேர்ந்த இராமலிங்கம் சுப்பிரமணியம் என்பவரால் குத்திக்கொலை செய்யப்பட்டார். இச்சம்பவம் துன்னாலையில் கடந்த சனிக்கிழமை காலை நடைபெற்றது.

கொலையுண்ட இராமலிங்கம் கந்தசாமியும் சீனியன் நடேசன், ஆள்வான் தனம் ஆகியோரும்சைக்கிளில்பிரயாணஞ் செய்துகொண்டிருக்கும்போது தசுப்பிரமணியத்தினால் டுத்து நிறுத்தப்பட்டு அவரது மார்பில் கத்தியால் குத்தப்பட்டதாகவும் கொலை செய்தவர் மது வருந்தியிருக்கக் காணப்பட்டதாகவும் தெரிகிறது.

பருத்தித்துறை நீதவான் திரு. சி. என். இராசதுரை மரண விசாரணையையும் டாக்டர் அருள்பிரகாசம் பிரேத பரிசோதனையையும் நடத்தினர்கள்.

கத்திக்குத்து வாங்கியவர் மந்திகை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கிருந்து யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுச் சிறிது நேரத்தில் மரணமானர்

பருத்தித்துறைப் பொலிசைச் சேர்ந்த உதவி பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. நல்லையாபுலன் விசாரணை நடத்திவருகிறார்.

## ‘காலனி’ சுதந்திர இயக்க மகாநாடு

லண்டன், ஏப்ரல் 20

காலனிகளுக்குச் சுதந்திரமளிக்க வேண்டும் என்ற இயக்கத்தின் 8–து மகாநாடு இங்கு மூடிவுற்றது. ஒடுக்கப்பட்ட மக்களின் சார்பில் குரல் எழுப்பிய மாகாநாடு காலனி மக்களின் சுதந்திரப் போராட்டத்திற்குத் தீவிரமாக ஆதரவளிக்குமாறு சகல மக்களையும் கேட்டுக் கொண்டுள்ளது.

லாவோஸின் உள்நாட்டு விவகாரங்களில் அமெரிக்கா தலையிடுவதைக் கண்டித்த மகாநாடு சியாட்டோ ஆக்கிரமிப்பு அணியில் பிரிட்டன் அங்கம் வகிப்பதால் அமெரிக்காவின் யுத்தச் சூதாட்டத்தில் பிரிட்டன் பகடக் காயாக நேரிடும் என்று எச்சரித்துள்ளது.

கியூபாமீது அமெரிக்காவிலுள்ள போர் விமானங்கள் குண்டு பொழிந்ததை வன்மையாகக் கண்டித்துள்ள மகாநாட்டுத் தீர்மானம் ஒன்று அமெரிக்காவின் ஆதரவுடன் கியூபாவின்மீது ஆக்கிரமிப்பு நடத்த எத்தனிக்கும் எதிப்ர் புரட்சி குண்டர் படைகளை நிராயுதபாணியாக்குமாறு ஐ நா. நிர்ப்பந்திக்க வேண்டும் என்று வற்புறுத்தியுள்ளது.

## தீவிபத்தில் 10 பேர் மரணம்

புதுடில்லி, ஏப்ரல் 21

டில்லி ராஜ்கோட்டுக்கருகில் ஏற்பட்ட ஒரு தீ விபத்தில் 10 பேர் மரணமானர்கள். பலர் காயமடைந்தார்கள். ஆயிரம் குடிசைகள் அழிந்துபோயின. 5 ஆயிரம் பேர் வீடிழந்துள்ளனர்.


தெய்வ வழிபாட்டிற்கும்
உங்கள் இல்லங்களில் நறுமணம் கமழ்வதற்கும்

33
303 ஊதுபத்திகளை
3003

உபயோகியுங்கள்.

யாழ்ப்பாணத்தில் ஸ்டாக்கிஸ்டுகள் தேவை.

தயாரிப்பவர்கள்:

எஸ். வி. முருகேசன் அன் சன்ஸ்,
பெங்களூர்–2.

சோல் ஏஜண்டுகள்:

ஜெகஜோதி அன் கோ.
குருநெனிய.



இலங்கையில் புகழ்பெற்ற

R. P. S. கோப்பித்தூளையே

எப்பொழுதும் உபயோகியுங்கள்.

குணத்திலும் மணத்திலும் சிறந்தது
R. P. S. கோப்பித்தூள்.

எங்களிடம்

- கடுகு
- மிளகு
- கொச்சிக்காய்
- பலசரக்குச் சாமான்கள்

மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

விபரங்களுக்கு:

ரஹ்மான் புரடியூஸ் ஸ்டோர்ஸ்
22, 26, பழையசோனகத் தெரு,
கொழும்பு-12.

Advt. 86 டெலிபோன்: 6146

# கொலைசெய்யப்படுமுன் ஆடிப்பாடி மகிழ்ந்தார்

## அவிசாவளை கொலைவழக்கில் சாட்சியம்

அவிசாவளை ஏப். 20 60 வயது கே.ஜோன்சிங்கோ என்பவர் கத்தியால் குத்திக் கொலைசெய்யப்பட்டது பற்றிய வழக்கு நீதியரசர் எல். பி. டி. சில்வா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப் பட்டது.

கொலைசெய்யப்படுமுன் காலஞ்சென்றவர் ஆடிப்பாடி மகிழ்ந்து கொண்டிருந்ததாக கோட்டில் தெரிவிக்கப்பட்டது.

இந்த வழக்கில் ஜாமால்சிரிபு என்பவர் எதிரியாக ஆஜர் செய்யப்பட்டார். இ. ஏ. புஞ்சி அப்புஹாமி என்பவர் சாட்சிய மளிக்கையில் பின்வருமாறு கூறினர்:-

சம்பவம் நடந்த தினத்தன்று காலஞ்சென்ற ஜோன்சிங்கோ ஒரு கடையின் முற்றத்தில் ஆடிப்பாடி மகிழ்ச்சிகொண்டாடிக்கொண்டிருந்ததை நான் பார்த்தேன். அவர் மது அருந்தியுள்ளதாகத்தெரிந்தது. கடைச் சொந்தக்காரர் அவரை வீட்டுக்குப் போகும்படி கேட்டுக் கொண்டார். ஆனல் அவர் அப்படிச் செய்யாமல் அங்கேயே இருந்தார். எனவே நான் அவரைப்பிடித்து அழைத்துக் கொண்டுபோனேன். அப்பொழுது எதிரி அங்கு வந்து அலவாங்கினல் எங்களைத் தாக்கினர். நான் விழுந்துவிட்டேன். அதன்பின் காலஞ்சென்றவரை எதிரி குத்தினர்.

பயத்தின்காரணமாகத் தாம் கத்தியைச் சுழற்றியதாக எதிரி கூறினர்.

ஜூரிகள் எதிரி குற்றவாளியென்று தீர்ப்பளித்தனர். நீதியரசர் எதிரிக்கு 5 வருடக்கடுங்காவல்தண்டனை விதித்தார்.

---

### மாத்தறையில் வரட்சி

மாத்தறை, வெள்ளி

மாத்தறைப் பகுதியில் கடும் வரட்சி நிலவுகிறது.

இப்பகுதியிலுள்ள குளங்களும் இதர நீர்நிலைகள் யாவும் வறண்டுவிட்டன. இதனல் குடிதண்ணீர்க் கஷ்டம் ஏற்பட்டுள்ளது.

---

### எந்த சிவசிதம்பரம்?

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

தனியாக வைக்கப்பட்டுள்ள பொழுது அப்பகுதி மக்கள் தங்கள் குறைகளை தெரிவிக்க எவருமில்லை.

நாட்டில் சட்டமும் ஒழுங்கும் நிலைநாட்டப்பட்டுவிட்டதென்று நிதிமந்திரி கூறுகிறார். அப்படியானல் அவசர காலச் சட்டம் நீடிக்கவேண்டிய அவசியமில்லை.

### இந்தியச் செய்திகள்

பாரத எல்லையைக் கடந்து சென்ற சீனப் பிரஜை ஒருவர் கைது செய்யப்பட்டார். நாட்டை விட்டு வெளியேறும்படி அவருக்கு உத்தரவிடப் பட்டது.

∴ ∴ ∴

இந்திய ரயில்வேக்கள் கடந்த ஆண்டு 1 கோடி வாகன் அளவுக்கும் அதிகமான சரக்குகளை ஏற்றிச் சென்றிருப்பதாய் அறிவிக்கப்பட்டது.

∴ ∴ ∴

ஒரிஸாவில் இரட்டை அங்கத்தினர் தொகுதிகளை ஒற்றையாகப் பிரிக்கும வேலை நடைபெற்று வருவதையும், சீக்கிரம் அது முடிவடையும் எனவும் தெரிகிறது.

∴ ∴ ∴

இந்தியாவில், ஜனதிபதி பதவியை 2 தடவைகளுக்குமேல் ஒருவர் வகிக்கக் கூடாத வகையில் அரசியல் சாயனத்தின் 57 வது ஷரத்தைத் திருத்த வேண்டும் என்று கம்யூனிஸ்ட் எம். பி. திரு. முபேடிகுப்தா ஒரு தீர்மானம் கொண்டுவந்திருக்கிறர்.

∴ ∴ ∴

டில்லியில் அடுத்த நிதி ஆண்டிலிருந்து சகல சாடசாலைகளிலும் 8-ம் வகுப்புவரை இலவசக் கல்வி போதிக்கப்படும்.

∴ ∴ ∴

அமெரிக்காவிலிருந்து வந்துள்ள 35 ராணுவ அதிகாரிகள், பாதுகாப்பு மந்திரி திரு. வி. கே. கிருஷ்ணமேனனைச் சந்தித்துப் பேசினர்கள்.

---

### வடக்கு கிழக்கு மாகாண நிலையில் மாற்றமில்லை

கொழும்பு ஏப்ரல் 21. வடக்கு, கிழக்கு மாகாணங்களின் நிலைமையில் மாற்றம் இல்லை என பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சும், உள்நாட்டுக் கலாச்சார அமைச்சும், விடுத்துள்ள கூட்டறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

---

### தஞ்சாவூர் சித்திரங்களுக்கு பாதுகாப்பு

புதுடில்லி, ஏப்ரம்20. தஞ்சாவூரிலும், ஏனைய இப் பகுதிகளிலுமுள்ள சுவர்ச்சித்திரங்களை ரசாயன முறையில் பாதுகாக்கத் தீர்மானிக்கப் பட்டிருப்பதாய் மத்திய கலாச்சாரமந்திரி டாக்டர்ஹுமாயூன் கபீர் அறிவித்தார். சோழ மன்னர் காலத்தின் அரிய சித்திரங்கள் தஞ்சாவூரில் இருக்கின்றன.

---

### கஞ்சாப்பிரியருக்கு 6 மாதச் சிறை

கம்பகா மாஜிஸ்திரேட்கோர்ட்டுக்கு கொலைவழக்கொன்றில் சாட்சியமளிக்கச் சென்ற திரு. கே. எஸ். பெர்னண்டோ என்பவர் ஆறுமாதக் கடுங்காவல் தண்டனையை அனுபவிக்க வேண்டிய நிர்ப்பந்தத்துக்குள்ளானர்.

சாட்சியமளிக்கச்சென்ற திரு. பெர்னண்டோ சாட்சிகள் தங்கியிருக்கும் இடத்தில், தாம் இருக்குமிடத்தையும் மறந்து கஞ்சா பிடிக்கத்தொடங்கினர். இது சம்பந்தமாக இவர்மீது தொடரப்பட்ட வழக்கில் நீதிபதி இவருக்கு 6 மாதக் கடுங்காவல் தண்டனை விதித்தார்.

## "பூமிதானத்தை இந்தியா முழுவதும் பரப்புங்கள்"

### அ. இ. சர்வோதய சம்மேளனத்திற்கு விேேபாபாவே செய்தி

சர்வோதயபுரம், (ஆந்திரா) ஏப். 21. 13-வது அகில இந்திய சர்வோதய சம்மேளனம் இங்கு விசேஷ பந்தலில் ஆரம்பமாகியது. சம்மேளணத்தில் 5ஆயிரம் பிரதிநிதிகள் கலந்து கொள்கின்றனர்.

வரவேற்பு கமிட்டித் தலைவர் பிரபாகர்ஜி சம்மேளனத் தலைவர் ஜெயப் பிரகாஷ் நாராயணனையும், இதர பிரதிநிதிகளையும் வரவேற்ருர். பிரதிநிதிகளுக்கும் ஸ்ரீ ஜெயப் பிரகாஷ் நாராயணனை தாதா தர்மாதிகாரி அறிமுகப்படுத்தினர்.

ஆச்சாரிய வினேபா பாவே சர்வோதய சம்மேளனத்துக்கு அனுப்பியுள்ள செய்தியொன்றில் பூமிதான மந்திரத்திலிருந்து புத்துணர்ச்சிபெற்று இந்தியாவின் மூலை முடுக்குகளில் பூமி தான இயக்கத் தீபத்தை சர்வோதய ஊழியர்கள் அனைவரும் ஏற்றுவர் என நம்பிக்கை தெரிவித்திருக்கிருர்.

வினேபாஜி குறிப்பிட்டிருப்பதாவது:— "பூமி தான இயக்கம் ஜனனமாகி 10 ஆண்டுகளாசின்றன. ஒவ்வொரு பத்தாண்டின் இறுதியிலும் சமூக சேவையில் புதியதொரு உத்வேகம் காணப்படுகிறது. இதனை சமூக துறை நிபுணர்கள் அறிவர்.

நிலப்பிரச்சனைக்குத் தீர்வு காண பூமிதானத்தைத் தவிர வேறு மார்க்கமில்லை என்பது தற்போது நிரூபிக்கப்பட்டுவிட்டது.

இவ்வித சூழ்நிலையில், பூமி தான கங்கை உற்பத்தியான ஆந்திராவில் சர்தோதய சம்மேளனம் இரண்டாவது தடவையாகக் கூடுகிறது.

பூமி தான மந்திரத்திலிருந்து உத்வேகத்தை பெறுவதன் மூலம் அதன் சுடரை இந்தியாவின் மூலை முடுக்குகளின் சர்வோதய ஊழியர் ஏற்றுவர் என்று நான் நம்புகிறேன். இதைவிட நான் வேறு என்ன செய்தி தரமுடியும்? உண்மையில் எனது பாத யாத்திரையே சிறந்ததொரு செய்தியாகும்."

சர்வோதய சமேளனத்துக்கு அனுப்பியுள்ள செய்தியொன்றில் பிரதம மந்திரி நேரு கூறுவதாவது ஆந்திரப் பிரதேசத்தில் நடக்கும் சர்வோதய சமேளனத்தில் கலந்து கொள்ள முடியுமென நம்பியிருந்தேன். ஆனல் அவ்வாறு கலந்து கொள்ள இயலாததற்கு வருந்துகிறேன்.

சர்வோதயத்தின் சார்பில் கூறப்படும் சில கருத்துக்களை நான் எப்போதும் ஏற்பதில்லை. ஆனல் அவற்றிடம் எனக்கு எப்போதும் மதிப்பு இருந்து வருகிறது. நாம் பின்பற்றும் கொள்கைகள் சிலவற்றுக்குப் பொருத்தமாக இல்லாவிடினும், அக்கருத்துக்கள், அநேக விதங்களில் என்னைக்கவரும் ஒரு மார்க்கத்தைப் பிரதிபலிக்கின்றன.

---

### சுகர்னே — கென்னடி சந்திப்பு

லாஸ் ஏஞ்சல்ஸ் ஏப்ரல் 21 இந்தோனேசிய ஜனதிபதி டாக்டர் சுகர்னே, 4 நாள் அமெரிக்க விஜயத்தை மேற்கொண்டிருக்கிருர். இன்று லாஸ் ஏஞ்சல்ஸ் வந்து சேர்ந்த அவர் திங்கட்கிழமை வாஷிங்டன் சென்று ஜனதிபதி கென்னடியைச் சந்திப்பார்.

---

### ஜேர்மனிக்குப் பயணம்

கொழும்பு ஏப்ரல் 21. சர்வதேச பௌத்த கழகத் தலைவர், தர்மதூத வேலை சம்பந்தமாக நேற்று ஜெர்மனிக்குப் பயணமானர்.

---

### தீர்மானம் நிராகரிப்பு

நியூயோர்க், ஏப்ரல் 21 காங்கோவில் ஐ. நா. நடவடிக்கைக்கு 100லட்சம் டாலர் தேவைப்படுவதாயும், இதில் 70சத விகிதத்தை வல்லரசுகள் தரவேண்டுமென்றும் கோரப்பட்டதீர்மானம் நிராகரிக்கப்பட்டது.

எப்பொழுதும் உபயோகியுங்கள்

டால்மியாஸ்

★ போட்லந்து சிமெந்து

★ ஸ்டோன்வெயர் குழாய்கள்

★ பயர் பிரிக்ஸ்

செட்டிநாட் கார்ப்பரேஷன் (பிரைவேட்) லிமிட்டெட்

116, 118, கெய்சர் வீதி,

கொழும்பு.

போன்: 585 தந்தி: மன்சூரு

நங்கையர் விரும்பும் அழகிற் சிறந்த நகைகள், வைரங்களுக்கு



சிறந்த ஸ்தாபனம்

கே. என். எம். மீருன் சாஹிப்

கன்னுதிட்டி யாழ்ப்பாணம்

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் தாபனததாரால் யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேலை வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1961-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 22-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பெற்றது.